தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 1, November 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

# பேராசிரியரின் "அண்ணல் அநுமன்" காட்டும் சமுதாய ஒழுக்கமும் சொல்லாளுமையும்

## Principles of Social Discipline and Oratorial Skills in Professor's "Annal Hanuman"

**முனைவர் ம. சித்ரகலா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.
**Dr. M. Chitrakala,** Assistant Professor of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9743-9420**
**DOI: 10.5281/zenodo.7252442**

### Abstract

*Literature in the times focuses on hazards that hamper the development of society. Literature is a mirror of society. The aspirants of literature must be aware of and analyze it systematically. They will authorize: Will the aspirant's presentation be beneficial for decades? Will it prevent the hazards of Society? Will it pave way for society's upliftment? Will it be feasibly for the present, past and future? Will there be a reformation in the self-development of an individual? Considering and applying the above-said aspects literature can be trustful and applicable for many generations. Kamban in his epic "Kamba Ramayana" has depicted the development of the society and the code of Behaviour of an individual. The Character Vedan and the inanimate species Jadau (Eagle) in "Ramanayana" are personified as the epitome of good discipline and are adored even today. Kamban's character Hanuman is depicted as an identity of social development and is revered for achievements and has been notified by Subbu Reddiar in his famous work entitled "Annal Hanuman" which adds additional crown and fame to Tamil literature. Modern Society is updated by innovations, which affects the social status of society. A self-disciplined society can flourish and progress by practising the moral ethics of Hanuman. This article explores how Hanuman protects humans from disasters and retains rejoicing and harmony. Hanuman by his teachings unites all the people, heals the hearts ailing from grief, removes despair and finally reforms them. In a short period, people regained hope, and courage for self-development. Hanuman's devotional faith and respect towards Rama who is the epitome of power and his compassion for the poor make him magnanimous. Subbu Reddiar's in his work personifies Hanuman as a multi-faceted power. Finally, the article concludes that Subbu Reddiar's work will be an aid for the development of society in future.*

**Keywords:** Social Discipline, Oratorial Skills, Professor's *Annal Hanuman*.

### ஆய்வுச் சுருக்கம்

*பண்டு தொட்டு இன்றுவரை இலக்கியங்கள் சமுதாய முரண்களைக் களைந்து சமுதாயத்தைச் செம்மையுறச் செய்யும் கால கண்ணாடி எனலாம். இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளன் என்பவன் தன் படைப்பு காலத்தால் பயன் பெறுமா? சமுதாயச் சீர்குலைவைத் தடுக்குமா? சமுதாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்குமா? முக்காலத்திற்கும் பொறுந்துமா? பண்பாட்டுச்சிதைவும், மரபு வழி மாற்றங்களும் ஏற்படுமா? தனி மனித ஒழுக்கத்திற்கு வழிவகுக்குமா? என ஆராய்ந்து ஒரு இலக்கியத்தைப் படைத்தால்*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

*அவ்விலக்கியம் எக்காலத்தும் போற்றப்படும். அவ்வகையில் கம்பன் தனது காவியமானக் கம்பராமாயணத்தில் சமுதாய மேன்மையையும் தனி மனித ஒழுக்கத்தையும் கருத்தில் கொண்டு தனது படைப்பை படைத்துள்ளான். எக்குடி பிறப்பினும் மேன்மக்கள் மேன்மக்களே என்ற அடிப்படையில் அரக்கர் குடி பிறந்த வீடணன் முதற்கொண்டு, அஃறிணை உயிரான சடாயு (கழுகு) வரை நீதியும் நேர்மையும் ஒழுக்கமும் உடைய கதாபாத்திரங்களாகப் படைத்து, சமுதாய ஒழுக்கமும் பண்பாடும் சீர்குலையாமல் உருவாக்கிய பாங்கு இன்றளவும் போற்றத்தக்கது. அவ்வகையில் வானர சேனையான அநுமனின் சொல்லாளுமையும், நீதி தவறாத சமுதாய ஒழுக்கத்தையும் கம்பன் படைத்த விதத்தை உணர்ந்த போராசிரியர் ந. சுப்புரெட்டியார் அநுமனின் சிறப்புக்களை 'அண்ணல் அனுமன்' என்ற தலைப்பில் நூலாக்கம் செய்து தமிழ்மொழிக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளார். பேராசிரியரின் நூலின்வழி அண்ணல் அனுமன் சிறப்புக்களைக் கட்டுரையாக்குதல் சமுதாய ஒழுக்கத்திற்கும் ஆளுமை மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும் என்ற நோக்கில் இக்கட்டுரை ஆராயப்படவுள்ளது. இன்றைய சமுதாயம் புதுமைகளைப் போற்றி, பண்பான நீதிநெறி ஒழுக்கங்களைப் புறம்தள்ளும் சூழலில் இருப்பதால், மரபுகளையும் பாரம்பரிய பண்புவழிவந்த ஒழுக்கநீதிகளையும் மீட்டுருவாக்கம் செய்யும் வகையில் இக்கட்டுரையில் அனுமன் பிறர் வாழ்க்கையில் நடக்கவிருக்கும் கோணல்களைத் திருத்தி மங்களச் செயல்கள் நடக்க துணைபுரிந்த பாங்கையும், பிரிந்த நட்பை இணைப்பதற்குப் பாலமாய் அமைந்ததோடு நட்பிற்கும் இலக்கணமாய் விளங்கிய சொல்லாளுமைத்திறன் பற்றியும், கலங்கிய இதயங்களுக்குக் கூறும் இதமான ஆறுதல் மொழி என்பது ஒரு மனிதனை உயிர்ப்பிப்பதோடு முன்னேற்றப்பாதைக்கே கொண்டு செல்லும் என்பதை உணர்த்தியப் பண்பாளுமை பற்றியும், உற்றது உரைத்து நம்பிக்கை ஊட்டும் பாங்கு பற்றியும், இராமபிரானிடம் கொண்ட பக்தியும், காதலின் ஆழமும், புரிந்துணரும் பாங்கும், உயிராக விரும்பியவருக்காகக் கடைசி வரை நின்று உதவிக்கரம் கொடுக்கும் செயல் திறனும், கலங்கமில்லா நட்பும், சமுதாய ஒழுக்கங்களும், தூதுவன் என்பவன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற தூதுவனின் சிறப்பியல்புகளை ஒருங்கே கொண்டு வாழ்ந்து காட்டிய அநுமனின் சிறப்பியல்புகளைக் கம்பனின் பார்வையில் பேராசிரியரின் நூல்வழிநின்று ஆய்ந்து, சமுதாய மேம்பாட்டிற்கு உதவுவதே இக்கட்டுரையின் ஆய்வுச்சுருக்கமாக அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்**: பேராசிரியரின் "அண்ணல் அநுமன்", சமுதாய ஒழுக்கம், சொல்லாளுமை.

**முன்னுரை**

ஒருவரின் எண்ணத்தின் பிரதிபலிப்பே அவரின் எழுத்தில் தெளிவுபடும். அவ்வகையில் கம்பனின் பண்பாட்டுச் சீர்படுத்தும் சிந்தனை வெளிப்பாடாக, கம்பராமாயணத்தில் பல நல்ல

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

கதாபாத்திரங்களின்வழி முக்காலத்தும் பொறுந்தும் பல நற்சிந்தனைகளை உலகுக்கு விதைத்துள்ளார். அவற்றில் தேர்ந்தெடுத்த முத்தான கதாபாத்திரமான அனுமனைப்பற்றிய கம்பனின் சிந்தனையை முன்வைத்தும், அனுமனால் காவியத்தில் ஏற்பட்ட நற்செயல்களைப் பட்டியலிட்டும் காட்டிய பாங்கு போற்றுதலுக்குரியது எனலாம். பண்பாட்டுச் சீர்குலைவை எதிர்நோக்கியிருக்கும் இன்றைய சமுதாயத்திற்கு வானரச் சேனையான அனுமனின் முற்போக்குச் சிந்தனைகளின்வழி சமுதாய ஒழுக்கத்தை ஏற்படுத்துவதோடு மரபுவழி வந்த பண்பாட்டு மீட்டுருவாக்கம் செய்யும் வகையிலும் இக்கட்டுரை ஆராயப்படவுள்ளது.

**பேராசியரின் *அண்ணல் அநுமன்***

சொல்லிற்கினியானான அநுமனைப் பற்றிய பேராசிரியரின் 121 ஆவது நூலாக ‘அண்ணல் அநுமன்’ என்ற நூலை வெளியிட்டது தமிழ் உலகுக்குக் கிடைத்த அருங்கொடை எனலாம். இராம பக்தனும், இராமன்மீது தீராக் காதல் கொண்டவனும், இதயத்தில் இராமனையே வைத்து இன்புற்று இருப்பவனுமான அனுமனைப் பற்றிய இந்நூலில் இராமனின் ‘ஶ்ரீ நாராயண நமக’ என்ற எட்டெழுத்து மந்திர போல எட்டுத் தலைப்புகளாகக், கவிக்கு நாயகன், சொல்லின் செல்வன், சிந்தனைச் செம்மல், விழையும் உருவினன், அஞ்சா நெஞ்சன், இராமதூதன், இராம பக்தன், குணக்குன்றன் என்ற வகையில் அநுமனின் குணாதிசயங்களைப் பற்றி கம்பனின் பார்வையை உய்த்துணர்ந்து படைத்துள்ளார் பேராசிரியர். ஆய்வு எல்லை கருதி இத்தலைப்புக்களில் ‘கவிக்கு நாயகன்’ (கம்ப. சுந்தர. ஊர்தேடு. 132) என்ற தலைப்பை மட்டும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கோணல்களைத் திருத்திய கோன்**

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு திருப்புமுனை இருக்கும். ஏதாவது ஒரு வகையில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நடக்கவிருக்கும் அவலநிலையை மாற்றி மங்கலம் உண்டாக வழிவகை செய்தவர்கள் இருப்பர். அவ்வகையில் இலக்கியங்களை உற்று நோக்கினால் சிலப்பதிகாரக் காப்பியத்தில் கடலாடு காதைவழி மாதவியின் வாழ்க்கையில் பிரிவு வந்தபோது கண்ணகியின் வாழ்க்கையில் கோவலன் வருகையால் திருப்புமுனை ஏற்பட்டதை,

**உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்ந்தனனாய் (சிலம்பு. கானல்., பா. 52)**
**நகைமுகங்காட்டிச் சிலம்புள கொண்ம் (சிலம்பு. கனாத்திறமுரைத்த காதை, பா. 73)**

என்று குறிப்பிடுகின்றது. அதுபோலவே தனிமனித வாழ்க்கையிலும் இவ்வகை மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. வாழ்க்கை அவலத்திற்குச் செல்லாமல் உதவிக்கரம் கொடுத்தவர்களை நன்றி உணர்வோடு எண்ணி மகிழ்ந்ததோடு மட்டுமல்லாமல் அவர்களைப் போற்றிப் புகழ்ந்தும், அடையாளப்படுத்தியும், பெருமைப்படுத்தியும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நற்பண்பு அக்காலத்தில் மேலோங்கி இருந்தது. ஆனால் இன்றைய கால கட்டத்தில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

இவ்வகைப்பண்பு மாற்றம் ஏற்பட்டுள்ள காரணத்தால் கம்பராமாயணக் காவியம் மங்கலமாக அமைத்த அநுமனின் செயல்திறனை ஆராய்வது ஈங்கு அவசியமாகின்றது. இதனை, பேராசிரியர்,

**இராமசரிதம் நடைபெறுகிற முறையில் அமைந்து விட்டால் (அநுமன் இல்லாவிட்டால்) அது துன்ப நிலையில் முடிவதாக அமைந்திருக்கும், கவிக்கு நாயகனான அநுமனே அதில் நடைபெற்ற கோணல்களை நிமிர்த்தி கதை மங்கலகரமாக முடியக் காரணமாக இருந்தவன் (அண்ணல் அநுமன், ப. 14)**

என்று குறிப்பிடுகிறார். பேராசிரியரின் பிறர் நலம் பேணுதல் வேண்டும் என்ற கருத்தை,

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின், அதான்**
**எல்லோருக்கும் உவப்பது (புறம். 195)**

என்று நரிவெருஉத் தலையானரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப அனுமன் பிறருக்கு நலம் பயக்கும் செயல்களையே செய்துள்ளான் என்பது கீழ்கண்டவாறு ஆராயப்படவுள்ளது.

**இலக்குவனை உயிர்ப்பித்து மங்கலம் உண்டாக்கல்**

மங்கலம் என்றால் அழகு, சுபம், நன்மை, தாலி என்று பொருள். வேதம் ஓதும் அந்தணர்களுக்கு அளிக்கப்பட்ட (இறையிலி) கிராமங்களை 'மங்கலம்' என்ற பெயரில் கூறுகின்றன. **இறையிலி நிலம் என்பது வரி நீக்கப்பட்ட நிலம் (தமிழ் மலர், ப. 72)** என்ற கருத்தை முனைவர் கீதாஞ்சலி அவர்கள் தனது பொருளாதாரச் சிந்தனைகள் என்ற கட்டுரையில் தெரிவித்துள்ளார். போர்களத்தில் இலக்குவன் உயிர் இழந்து இருந்தால் இக்காவியம் அமங்கலமாக முடிந்திருக்கும் ஆனால் அனுமன் இலக்குவனை உயிர்பிக்க மருந்து மலையை இரு முறைக் கொண்டு வருகிறான், முதல் முறை கொண்டு வரும்போது, வாயுபகவான் அநுமன் கொண்டுவரும் மலையில் மீதுள்ள மருந்தில் பட்டு வீசிச் சுக்கிரீவன் முதலியோரை உயிர்த்தெழுமாறு செய்துவிடுகின்றான் என்றும் குறிப்பிடும்போது அநுமனாலேயே இச்செயல் அனைத்தும் மங்கலமாக முடிந்தது என்பது தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றது. இதனை, **இந்நிகழ்ச்சிகள் நடைபெறாமல் போயிருப்பின் இராமகாதை செவிக்குத் தேனென இனித்திராது. துன்பக் கதையாக முடிந்திருக்கும் (மேலது, ப. 17)** என்று பேராசிரியர் குறிப்பிடுவது ஈங்கு உற்று நோக்கத்தக்கது. மேலும், போர்க்களத்தில் இராவணன் தன் தம்பியான வீடணனை கொள்ள அம்பு தொடுக்க இலக்குவன் குறுக்கில் நின்று தன் உயிரைக் கொடுக்கிறான். இதனைக் கண்ட வீடணன், இலக்குவன் இறந்தபின் நான் உயிரோடு இருந்து என்ன பயன் என்ற வீடணனைப் பார்த்து சாம்பவான்,

**அநுமன் இருக்கையில் ஆருயிர்க்கு இரங்குவதறிவே?**
**சிறிதும் அல்லலுற்று அழுங்கன்மின் (யுத்த. வேலேற்ற படலம், பா. 41)**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

என்றதோடு இம்முறை மருந்துமலை அநுமனால் எளிதில் கொண்டுவரப்படும் என்பதை,

**தந்தனன் மருந்து தன்னைத்**
**தாக்குதல் முன்னேக யோகம்,**
**வந்தது மாண்மடார்க்கு எல்லாம்**
**உயிர்தரும் வலத்தது என்றால்,**
**நொந்தவர் நொய்வு தீர்க்கச்**
**சிறிதன்றோ நொடித்தல் முன்னே**
**இந்திரன் உலகம் ஆர்க்க**
**எழுந்தனன் இளைய வீரன் (யுத்த. வேலேற்ற படலம், பா. 42)**

என்று சாம்பவான் குறிப்பிடுகிறான். இவ்வாறு இளையவனான இலக்குவனை இருமுறை உயிர்ப்பித்தால் இக்காவியம் மங்கலமானது என்பதை மறுப்பதற்கில்லை.

**பரதனின் உயிர் காத்து மங்கலம் உண்டாக்குதல்**

இன்றைய காலகட்டம் "கிழவி எப்ப சாவா... திண்ண எப்ப காலியாகும்..." என்ற பழமொழி போல அண்ணன் செத்தால் தான் அரசன் ஆகலாம் என்று எண்ணுவதும், ஒரு செண்டு நிலத்திற்காக ஒரு தாய் வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பிகள் வெட்டிக்கொண்டு உயிர்விடும் சூழல் உள்ளது. உடன்பிறந்தவர்களின் பெருமையை,

**உடன்பிறப்பில்லா உடம்பு பாழ் (நல்வழி, பா. 24)**

என்று ஔவையார் குறிப்பிடுவதுபோல,

**கூடப்பிறந்தவர்க்கு எய்து துயர் தமது துயர்**
**கொண்டசுகம் தம்சுகமெனக்**
**கொடுதாம் தேடு பொருள் அவர் தேடுபொருள் அவர் கொள்**
**கோ(து) இல் புகழ் தம் புகழெனத்**
**தேடுற்ற அவர் நிந்தை தம் நிந்தை தம் தவம்**
**தீது இல் அவர் தவமாம் எனச்... (அற. ச. பா. 4)**

உடன் பிறந்தவர்கள் நிலையையும் ஒற்றுமையையும் அறப்பளீசுவரசதகமும் கூறி நிற்கின்றது. அவ்வகையில் சகோதர பாசத்திற்கு இலக்கணம் கூறும் ஒப்பற்ற சகோதரனாக பரதன் விளங்குகின்றான். இராமன் தன் தம்பியான பரதனிடம் பதினான்கு ஆண்டுகள் முடிந்து வருவேன் என்று சொன்னார். ஆனால் இராமன் குறித்த நேரத்தில் வரவில்லை என்று நெருப்பில் விழ தயாராகிறான் பரதன். பரதனிடம் இராமன் வருகையைக் குறித்த நேரத்தில் தெரிவித்த பண்பாளன் அநுமன் என்பதை கவிஞர்,

**ஐயன் வந்தனன் ஆரியன் வந்தனன்**
**மெய்யின் மெய்யனை நின்னுயிர் வீட்டினால்**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

**உய்யு மேயவன் என்றுரைத்து உட்புகாக்**

**கையினால் எரி யைக்கரி ஆக்கினான் (யுத்த. மீட்சி., பா. 240)**

என்று உயிர்காத்த செம்மலானான் அநுமன் என்பது ஈங்கு புலப்படும். இதனை, **அநுமன், இராமன் கட்டளைப்படி இச்செய்தியைக் கூறி இராவிடில் இராமகாதை துன்ப முடிவாக மாறியிருக்கும் (அண்ணல் அநுமன் ப. 14)** என்று பேராசிரியர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆக அநுமனின் ஒவ்வொரு செயலும் கம்பராமாயணக் காவியம் மங்கலமாக அமையப் பேருதவியாக இருந்தது எனலாம். இம்மரபுவழி வந்த இன்றைய இளைய சமுதாயத்திற்கு இதனைக் கற்றுக் கொடுக்க வேண்டியது இன்றியமையாத பண்பு என்பதாலும், எச்சூழ்நிலையிலும் பிறரைத் துன்பப்படுத்தி தான் இன்பம் காணாமல், பிறருக்கு நல்லமுறையில் உதவி செய்து நயம்பட வாழச் செய்தல் வேண்டும் என்ற உயர் சிந்தனையையும் கருத்தில் கொண்டு இத்தலைப்பு ஆராயப்பட்டது. அநுமனின் இப்பண்பு நலன்களைக் கடைபிடித்தால், அநுமன் மங்கலத்திற்குரியவனாக இன்றளவும் போற்றப்படுவது போல் போற்றப்படுவோம் என்பது திண்ணம்.

**கண்டதும் கணிப்பு**

ஒருவரைப் பார்த்த உடனே அவரின் பண்பு நலன்களைக் கணிக்கும் பண்பையே கண்டதும் கணிப்பு என்று கூறலாம். இதனை உளவியல் என்றும் கருதுவர். உளவியல் என்பது உள்ளத்தின் உணர்வுகளை ஆராய்கின்ற ஒர் அறிவியலாகும். உளவியல் என்பதற்கு இணையான கிரேக்கச் சொல் “சைக்காலஜி” (Psychology) என்பதாகும். “சைக்” ‘Psyche’ என்ற கிரேக்கச் சொல் ஆன்மாவைக் (Soul) குறிக்கும். “லாகாஸ்” என்ற கிரேக்கச் சொல் அறிவு அல்லது ஆய்வு என்று பொருள்படும்” (An Introduction to Psychology, p.1) என்றும் ஆன்மாவைப் பற்றிய அறிவு அல்லது ஆன்மாவைப் பற்றிய ஆய்வு என்று இச்சொல்லுக்கு எஸ். கே. மங்கள் பொருள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**உளவியல் மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக அறிகின்ற ஓர் அறிவியல், உளவியல் பல துறைகளை உடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையை முழுமையாக ஆய்வதாகும். (உளவியல் துறைகள், ப. 1)**

என்று மு. இராசமாணிக்கம் விளக்கம் கூறுவார். மேலும்,

**மனிதனின் புறச்செயல்களை உற்று நோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை, எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும். (கல்வியின் உளவியல் அடிப்படை, ப. 5)**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

என்று வி. கணபதி கூறுகிறார். ஆய்ந்துநோக்குங்கால் இராமன் அனுமனைக் கண்டதும் அவனது சொல்லாளுமைத் திறனை அறிந்து கொண்ட உளவியல் பாங்கு உடையவராகக் கம்பர் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கம்பன் தனது காவியத்தில் இராமனைத் தவிர யாருக்குமே தரப்படாத புகழ்மிகு வார்த்தைகளை அனுமனுக்கு மட்டுமே சொல்லப்படுகின்றன. அதுவும் ஸ்ரீராமனாலேயே சொல்லப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இராமன் அனுமனை முதல் முதலில் சந்தித்தபோது அவனின் சொல்லாளுமைத் திறமையையும் கல்வியறிவும் ஆளுமைத்திறனையும் உணர்ந்து,

> **இல்லாத உலகத்து எங்கும் ஈங்கு இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும்**
> **வேதக்கடலுமே என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்று அன்றே,**
> **யார்கொல் இச்சொல்லின் செல்வன்?**
> **வில் ஆர் தோள் இளைய வீர !**
> **விரிஞ்சனோ விடை வானோ**
> **இராமனின் நம்பிக்கை நாயகன் (கம்ப. 6307)**

கூறுவதும், அதுபோலவே அனுமன் சிறந்த சிந்தனையாளன் என்பதால் வந்து கொண்டு இருக்கும் இராம இலக்குவரைக் கண்டு, வாலியின் ஏவலால் வருகின்றவர்கள் அல்லர். தளர்கின்ற நிலைமையுடையவர்கள் என்பதைத் தனது ஞானத்தால் உணர்கிறான். அதுமட்டுமின்றி அனுமன் சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்றபோது இராவணன் காற்கடையில் அவன் மனைவியரான அரக்கியரிடையே மிகவுயர்ந்த படுக்கையில் மண்டோதரி படுத்து உறங்குவதைக் கண்ட அனுமன், சீதையென எண்ணினான். பின் அங்க இலக்கண நூலாகிய சாமுத்திரிகா சாஸ்திரத்தைச் சூரிய பகவானிடம் கற்றுத்தேர்ந்தவன் அனுமன் என்பதால்,

> **உத்தமப் பெண்களுக்குரிய லட்சணங்கள் இவளுடம்பில் இருந்தாலும், இவளிடம் தோன்றுகின்ற அவலட்சணங்களைக் கண்ட அனுமன், சில தினங்களுக்குள் இவள் பெருந்துன்பத்தை அடைவாள் என்பதையும் உணர்ந்தான். (பன்முக நோக்கில் வைணவ இலக்கியம், ப. 222)**

என்று சீ. முத்துலட்சுமி, சுந்திரகாண்டத்தில் சொல்லின் செல்வன் என்ற தனது கட்டுரையில் மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளார். இச்செயல்களை உற்றுநோக்குங்கால் அனுமன் ஒருவரைப் பார்த்தவுடனே அவர்களின் அங்க அடையாளங்களை வைத்து அவர்களின் குணநலன்களைக் கணிக்கும் உளப்பாங்குடையவன் என்பது விளங்கும். ஆக இன்றைய கால கட்டத்தில் தகவல் தொடர்பு சாதனங்களில் வளர்ச்சியால் ஒருவரையொருவர் பார்ப்பதே இல்லை. கைப்பேசி, கீச்சகம் போன்றவைகளின்வழி ஒருவரிடம் நட்புக் கொள்வதும், நம்பிக்கை வைப்பதும், பணபரிவர்த்தனைகள் செய்து ஏமாந்து போவதும், காதல் திருமணம் செய்துகொண்டு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

புரிதலின்றி பிரிதலும் இன்றைய சமுதாயத்தின் சாபக்கேடு ஆகிவிட்ட காரணத்தால் ஒருவரைப் பார்த்து புரிந்துணரும் பண்பு அவசியமாக வேண்டும் என்பதை காட்டும்வகையில் இத்தலைப்பு ஆராயப்பட்டுள்ளது.

**நம்பிக்கை ஊட்டல்**

நம்பிக்கை என்பது தும்பிக்கை போல் என்று சொல்வார்கள். நம்பு என்ற சொல்லுக்கு விருப்பம், விருப்பு, பற்று, ஆசை, நம்பிக்கை கொள், எதிர்பார் போன்ற அகராதிப் பொருள்கள் காணப்படுகின்றன. “Belief – என்ற ஆங்கிலச் சொல் நம்பிக்கை” என்ற பொருளில் பயிலப் பெற்றதை (Chidambaranathan Chettiar (Ed) English, Tamil Dictionary p. 81) ஆங்கில அகராதி உணர்த்துகிறது. இங்கு சுக்ரீவன் இராம இலக்குவரைப் பார்த்து பயப்படுகிறான். தனக்கு துன்பம் தர வந்த வாலியின் ஆட்கள் என அஞ்சுகிறான். ஆனால் அனுமன் அவர்களைப் பார்த்த உடனே தருமத்தின் நாயகனாகவும் அநீதிகளை அழிக்க வந்த அம்சமாகவும் இராமனை எண்ணியிருந்ததோடு, மலை முழையில் பதுங்கியிருந்த சுக்கிரீவனுக்குத் தேறுதல் கூறுகின்றான். பின்னர், மாணி வடிவத்துடன் இராமலக்குமணர்களை அணுகி, அவர்களுடன் விநயமாகப் பேசியும், மீண்டு வந்து சுக்கிரீவனுடன் தெளிவாகப் பேசியும் இருவர்களிடையும் நேசத்தையும் பாசத்தையும் உண்டாக்கிவிடுகின்றான். (அண்ணல் அநுமன், ப. 150) என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பயப்பட்ட சுக்கிரீவனுக்கு ஆறுதலோடு நில்லாமல் இராமன் சுக்கிரீவனுக்கு உதவும் வண்ணம் உரையும் நிகழ்த்துகிறான் சொல்லின் செல்வன். அதோடுமட்டுமல்லாமல் இராமலக்குமணர்கள் சுக்கிரீவன் இருப்பிடத்திற்கு வந்து அவனின் விருப்பப்படி அங்கு விருந்துண்டபின் இராமன் சுக்கிரீவனிடம்,

> **பொருந்து நன்மனைக்குரிய பூவையைப்**
> **பிரிந்து னாய்கொலே நீயும்! (கம்ப. கிட். நட்புக்கோள்., பா. 35)**

என்று அன்போடு வினவுகிறனான். அதற்கு அநுமன் விடை கூறத் தொடங்கி வாலியின் வரலாற்றைக் குறிப்பிட்டு பின் இராமனின் வினாவிற்கு விடையாக,

> **உருமை யென்று இவற்கு உரிய தாரமாம்**
> **அருமருந்தையும் அவன்வி ரும்பினான்**
> **இருமை யுந்துறந்து இவன்இ ருந்தனன் (மேலது, பா. 67)**

என்று கூறியதைக் கேட்ட இராமன் சுக்கிரீவனுக்கு உதவிக்கரம் கொடுக்கும் பொருட்டு வாலியைக் கொல்வதாக உறுதி கூறுகின்றான். மேலும் அனைவரும் இன்புற்று வாழ வேண்டும் என எண்ணுவதே உயர் சிந்தனை. இதனை “எல்லோரும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே” என்றார் தாயுமானவர். அவரின் வயிர வரிகளுக்கு ஏற்ற எண்ணம் கொண்டவராக அனுமன் விளங்குகிறான். அநுமன் சூடாமணிப்

International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

படலத்தில் சீதாப்பிராட்டி இல்லாமல் வாழும் இராமபிரானின் துன்பத்தைப் போக்குவதொடு. அரக்கர் குலத்தை அழித்து இந்த உலகத்தின் துன்பத்தையும் போக்குவேன் என கூறுவதை,

**…சிந்தைஉறு வெம்துயர் தவிர்ந்து தெளிவோடும்**

**அந்தம் இல் அரக்கர்குலம் அற்று அவிய நூறி**

**நந்தல்இல் புலிக்கண் இடர், பின் களைதல் நன்றால் (கம்ப., பா. 5460)**

என்று கூறுவதன்வழி அநுமன் அனைத்து உயிர்களிடமும் நேயமுடன் இருந்ததோடு, நம்பிக்கை நாயகனாகவும் விளங்கியுள்ளான் என்பது விளங்கும்.

பிறர் "துன்பங்கண்டு அதனைப் போக்கும் எண்ணம் கொண்டவரே மனிதநேயர்" என்று முனைவர் பொ. மா. பழனிசாமி தனது (தமிழ் இலக்கியத்தில் மனித நேய மாண்புகள்) வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார். இவ்வாறு ஒருவர் அஞ்சும்போது அவருக்கு ஆறுதல் வார்த்தை மட்டும் கூறாமல் வலிமையுடையவரிடம் தகுந்த முறையில் பேசி, அஞ்சியவரின் வலிக்கு வழி காட்டுவது சிறந்த நம்பிக்கை ஊட்டல் எனலாம். இன்றைய காலத்தில் ஆதரவற்று இருப்பவர்களும், நல் உறவுவின்றி சோர்ந்தும், முன்னேற்றத்திற்குக்கேற்ற வழியின்றி தவிப்பவர்களும், நான் இருக்கிறேன் என்ற நம்பிக்கை வார்த்தை கூறி ஊக்குவிப்பவர்கள் இன்றி தவிப்பவர்களும் பலர் உள்ளனர். அவர்களுக்கு அநுமன் போல் நல்வழிகாட்டி இருந்தால் அவர்களுடைய வாழ்வு வளம் பெறும் என்பதற்கு இந்நிகழ்வு சிறந்த சான்றாக அமைகிறது எனலாம். ஆக சமுதாயத்தில் மனிதன் மனிதத்தின்மேல் நேயம் கொண்டு வாழ்தல் வேண்டும் என்ற நோக்கத்தில் அநுமனின் இச்செயல் ஆராயப்பட்டுள்ளது.

**வினைத்திட்பம்**

ஒரு தொழிலை அல்லது வேலையை ஒருவரிடம் கொடுத்தால் அந்த வேலையை நுட்பமாக ஆய்ந்து தெளிவாகச் செய்யும் திறன் உடையவரே வினைத்திட்பம் உடையவர் என்பதை வள்ளுவர்,

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**

**மற்றைய எல்லாம் பிற (குறள். 661)**

என்றார். இவ்வகையில் அனுமன் சீதாப்பிராட்டியைத் தேடுதற் பொருட்டுக் எடுத்த வடிவம் வாமனாவதாரம் எனலாம். கதவுகள் சாத்திப் புட்டிடப் பெற்ற இடங்களிலும் அக்கதவுகளில் வயிர ரத்தினமான திறவுகோல் செல்லும் இடங்களில் எல்லாம் நுண்ணிய நூலைக்காட்டிலும் இளங்காற்றைக் காட்டிலும் நுட்பமாகத் தன் வடிவம் அமைய நுழைந்து சென்று அநுமான் பார்த்தாதன் என்பதனைக் கம்பரின் இவ்வடிகள் நமக்கு புலப்படுத்துகின்றதை,

**தழைந்த மொய்யொளி பெயம்மணித் தாழ்தோறும்**

**இழைந்த நூலினு மின்னிளங் காலினும் (கம்ப. சுந்தர., பா. 263)**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

என்று கூறிப்பிடும்போது ஆளைக்கண்டு எடை போடக்கூடாது என்பது விளங்கும். இதனையே வள்ளுவ பெருந்தகை,

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து (குறள். 667)**

என்கிறார். மேலும் இச்செயலை உற்று நோக்குங்கால் "அர்ஜுனன் தவத்திற்கு இடையுறாய் இருந்த பன்றியைத் தாக்க சிவனார் வேடன் உருவெடுத்துச் சென்றார் என்று முறைவர் சீ. தீபா தனது கட்டுரையில் (தேவார திருவாசகத்தில் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும், ப. 91) தெரிவித்துள்ளார். ஆக ஒரு வேலையை நுட்பமாக ஆய்ந்து செய்வதோடு அவ்வேலையில் எந்த இன்னல்கள் வந்தாலும் கருமமே கண்ணாக வேலையை நுட்பமாகவும் சிறப்பாகவும் முடிக்க வேண்டும் என்பதை அனுமனின் இச்செயல்வழி நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

**நல்ல நட்பை ஏற்படுத்திய செம்மல்**

நட்பு என்பதற்கு அன்பு, ஒத்த கருத்து, நலன், அக்கறை, முதலரியவற்றின் அடிப்படையில் உறவினர் அல்லாதவருடன் கொள்ளும் உறவு என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. பண்டு தொட்டு இன்று வரை நட்பைப்பற்றிச் சொல்லாத இலக்கியங்களே இல்லை எனலாம். தமிழ் வேதமான திருக்குறளில் வள்ளுவப்பெருந்தகை உண்மையான நட்பு அகத்தில் மலரவேண்டும் என்று குறிப்பிடுகிறார். சங்க இலக்கியமோ அதியமான் ஔவையின் நட்பையும், பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் நட்பையும், பாரி கபிலர் நட்பையும் நட்புக்கு இலக்கணமாகவே பறை சாற்றுகிறது. நட்பின் ஆழம் என்பது நண்பனுக்கு வலி வரும் போது வழி காண்பிப்பது, சோர்ந்துவிடும்போது தோள் கொடுப்பது, மனம்தளரும்போது ஊக்கவுரைகள் சொல்லி மனந்தளராமல் செய்வது இவையெல்லாம் நல்ல நண்பனுக்கு அழகாக அமையும் எனலாம். மேலும், நல்ல நண்பர்கள் என்பவர்கள் நல்ல நட்பை இணைக்கும் பாலமாகவும் திகழ்வர் என்பதற்கு அநுமன் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறான். அண்ணன் வாலிக்குப் பயந்து சுக்கிரீவன்,

**அநுமன் உட்பட சில நல்ல வானரர்களுடன் கிட்கிந்தையை விட்டு வெளியேறி, ஒரு முனிவர் சாபத்தால் வாலி புக முடியாத ருசியமுக பர்வதம் என்ற பகுதியில் வாழ்ந்து வருகின்றான். இராமலக்குமணர்கள் பிராட்டியைத் தேடிக்கொண்டு அவ்வழியாக வந்தபோதுதான் இந்த நட்பு ஏற்படக் காரணமாக அமைந்தவன் அனுமன் (அண்ணல் அநுமன், ப. 14)**

என்பதை தனது நூலில் தெளிவாக விளக்குகின்றார் பேராசிரியர். இராவணனின் தம்பி வீடணன் இராமனிடம் அடைக்கலம் தேடி வருகிறான். அப்போது இராமன் தன்னோடு இருப்பவர்களிடம் வீடணனை ஏற்றுக்கொள்ள ஆலோசனை கேட்கிறான். அனைவரும் வீடணனைத் தவிர்க்க ஒவ்வொரு காரணங்கள் சொன்னார்கள். ஆனால் அனுமன் வீடணன்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

அரக்கர் குடிப்பிறந்த நல்லவன் என்பதை சொல்லால் தொடுத்துக் கூறினான். அனுமனின் இச்சொல்லவன்மையை உணர்ந்து இராமன் வீடணனை ஏற்றுக் கொண்டதை,

**குகனொடு ஐவர் ஆனோம்முன்பு பின் குன்று சூழ்வான்**
**மகனொடு அறுவரானோம் எம்முழை அன்பின் வந்த**
**அகன் அமர் காதல் ஐயநின்னொடும் எழுவர் ஆனெம்**
**புகல் அருங்கானம் தந்து பதல் வரால் பொலிந்தான் நுந்தை (கம்ப., பா. 6507)**

இவ்வாறு இராமன் கூறினான். தன் தந்தையான தசரதனை அரக்கர் குடியில் பிறந்த வீடணனின் தந்தையாகவே இராமன் கூறும்வகையில் அநுமன் வீடணனைப் பற்றி உரைத்துள்ளான் என்பதை,

**உயர்குடியில் பிறந்தவர்கள் தன்னையும் தன்னுடைய இனத்தாரையும் மட்டும் உயர்ந்தவராகக் கருதாது அனைத்து உயிர்களையும் தம் உயிர்ப்போல கருதுவது சிறப்பு (தமிழ் இலக்கியத்தில் ஆளுமை. ப. 270)**

என முனைவர் ம. சித்ரகலா தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது பொருத்தமாகும்.

**தூதின் ஒழுங்கு காத்த செம்மல்**

தூது என்பதற்கு இருவரிடையே சந்து செய்வித்தல், கூழாங்கல், செய்தி, பகை, தானாதிபதி எனப் பல பொருள்களை வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது. இதனைத் திருமகள் அகராதி தூது மொழி என்றும் ஒரு வகை நூல் என்றும் செய்தி, கூழாங்கல் என்றும் இருவரிடையே பேச்சு நிகழ்வதற்கு உதவியாக உள்ளவர் என்றும் பொருள் தருவதோடு தூதன் என்பதற்கு ஒற்றன், செய்தியறிவிப்போன், ஏவலாளன், புதன், தேவ தூதன் என்றும் தூதி என்பதற்கு தூது செல்பவள் என்றும் பொருள் தருகிறது. சங்கஇலக்கியத்தில் தூதாகப் போவதை ‘தூதாடுதல்’ என்றும் கூறுவர். இதனைக் கலித்தொகைப் பாடலில் “நாடிநின் தூதாடித் துறைச் செல்லாள்” (கலித். 72) என்று குறிப்பிடுகின்றது. மேலும் தூதின் மெய்மைத் தன்மையிலிருந்து மாறுவது தூதிற்கு இழுக்கை ஏற்படுத்தும். தூது செல்பவர் தூது அனுப்பியவரை பாதிப்புக்குள்ளாக்காது இருத்தல் வேண்டும். அதாவது தலைவன் தலைவி தூதில் தலைவியிடம் தூதாகச் சென்றபொருள் தலைவனின் காதலின் புனிதத்தன்மையை எடுத்துரைக்க வேண்டுமே தவிர தன் காதலுக்கு வழிவகுத்தோ அல்லது தீங்கிளைத்துப் பிரிவு ஏற்படுமாறு செய்வதோ கூடாது. இதேபோல் புறத்தூதாக இருந்தால் புறச்செய்தியைக் கூறி தூதனுப்பிய மன்னனுக்கு இழுக்கோ, பகையோ ஏற்படாமலும், பொருள்மேல் உள்ள மோகத்தால் நாட்டையே காட்டிக் கொடுக்கும் கொடூரத் தூதனாக மாறாமலும், மண்ணாசை பிடித்து மன்னனையே வீழ்த்தி தான் அரியணையில் அமரத்திட திட்டமிடும் நன்றிகெட்ட தூதனாக மாறிவிடாமல் இருக்க வேண்டும் என்பதை தூதுஇலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இன்றைய காலத்தில் காலத்திற்கேற்ப தன் பண்பை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி இனத்தைச்

E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 1, November 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

சேர்ந்தவர்களாக மனிதர்கள் மாறி இருப்பதால், அம்மாற்றம் தூதின் பண்பை மாற்றி விடக்கூடாது என்பதற்காகவே தூதின் உயர்தன்மையை ஒவ்வொரு இலக்கியமும் ஆணித்தரமாக கூறியது. இதனைக் கம்பர், **தூதரை எறிதல் என்பது பல்லியது. பழியொடு புணரும் (கம்ப. சுந்த., பா. 82)** என்று குறிப்பிடுகிறார். அவ்வகையில் அனுமன் இராமபிரானின் ஏவலின்படி சீதாப்பிராட்டியைத் தேடி இலங்கை நகரில் செல்கிறான். அங்கு சீதாப்பிராட்டி அரக்கியர் சூழ இருப்பதைக் கண்டு மகிழ்கின்றான். அதே சமயம் எப்படி சீதாதேவியிடம் தான் இராமனின் தூதுவன் என உரைப்பது என சிந்தித்து தன் திறனால் அரக்கியர்கள் அனைவரையும் தூக்கத்தில் ஆழ்த்துகிறான். பின் சீதாப்பிராட்டியைக் காணுகிறான். அப்போது சீதாதேவியோ தன் நிலையை எண்ணியும் தன் குலப்பெருமையை எண்ணியும், இராமபிரான் தன்னைக் காணாது தவிக்கும் தவிப்பை எண்ணியும், தன்னை எப்படி மீட்பார் என்பது பற்றியும் பலவாறு புலம்பி தவித்து இறுதியாக தான் கற்புடையவள் என்பதை எப்படி உணர்த்த முடியும் அது இயலாத காரியம் என முடிவு செய்ததை,

**ஆதலான், இறத்தலே அறத்தின் ஆறு எனா**
**சாதல் காப்பவரும் என் தவத்தின் சாம்பினார்,**
**ஈது லாது இடமும் வேறு இல்லை (கம்ப., பா. 5248)**

என்று இறப்பதே மேல் என தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தாள் சீதாப்பிராட்டி. இதை உணர்ந்த அனுமன் நடுவுநிலையிலும் நிற்க வேண்டும், தேவியைக் காப்பாற்றி நம்பிக்கையும் அளிக்க வேண்டும், தேவியின் மெய் தீண்டவும் கூடாது என்ற நிலையில் உயிர்காக்கும் உயர்நெறியில் செயல்பட்டதை,

**கண்டனன் அனுமனும்; கருத்தும் எண்ணினாள்,**
**கொண்டனன் துணுக்கம்; மெய் தீண்டக் கூசுவான்,**
**'அண்டர் நாயகன் அருள் தூதன் யான்' எனா,**
**தொண்டை வாய் மயிலினைத் தொழுது, தோன்றினான். (கம்ப., பா. 5249)**

என்பதன் வழி அனுமன் இராம நாமத்தைக் குறிப்பாக சொன்னதன்வழி சீதாதேவியின் உயிரைக் காப்பாற்றினான். இதை உணர்ந்த தேவி அனுமானின் செயல்களால் நற்தூதன் என்று உணர்ந்ததோடு அவன் எக்குலத்தில் இருப்பவனாக இருந்தாலும் உயிரைக் காத்தவன் என்பதை நன்றி உணர்வோடும் அனுமன் மேல் கொண்ட உயர் எண்ணத்திலும் கூறிய செயல்வழி சீதாதேவியின் உள்ளப்பாங்கு புலப்படும். இவ்வாறு அனுமன் சீதாதேவியின் உயிரைக்காத்து, இராமன் வருவான், தன்னை மீட்பான் என்ற நம்பிக்கையூட்டி தூதிற்கு சிறப்பு செய்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு ஒருவருக்குத் துன்பம் வரும்போது அவர் துன்பத்தை நீக்கும் தன்மையை பழமொழி நானூறு,

**அல்ல லொருவர்க் கடைந்தக் கால் மற்றவர்க்கு**

International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

**நல்ல கிளைகள் எனப்படுவார் – நல்ல**
**வினை மரபின் மற்றதனை நீக்கும் அதுவே**
**மனைமர மாய மருந்து (பழ., பா. 305)**

என்ற பாடலின்வழி ஒருவர்க்குத் துன்பம் வந்தபோது அவர்க்கு மிக்க உறவினரென்று சொல்லப்படுகின்றவர் நல்ல செய்கை மரபினாலே அத்துன்பத்தை நீக்குதலான அச்செய்கை மனையின்கண் நின்ற மருந்தாய மரத்தோடு ஒக்கும் என்பது போல, இராமனின் துன்பத்திற்கு மருந்தாக, அனுமன் இராமபிரானிடமும் சென்று குறிப்பினாலேயே சீதாப்பிராட்டியைக் கண்டதை உணர்த்தியதோடு நன்மொழியும் நேயத்தோடு மொழிவதைக் கம்பர், "கண்டனென், கற்பினும் அணியைக் கண்களால்" என்றதோடு உலக நாயகனான இராமனிடம், "அண்டர் நாயக! இனி துறத்தி ஐயமும் பண்டு உளதுயரும்" போகும் என மிகத் தெளிவாகக் கூறி இராமனின் துயர் துடைத்த நற்தூதனாக அனுமன் விளங்கினான்.

**முடிவுரை**

பிறருக்கு நற்செயல்கள் செய்து பிறர் வாழ்க்கையில் மங்கலச் செயல்கள் நடக்க உதவுதல் வேண்டும் என்றும் ஒருவரைப் பார்த்து அவரின் பண்புநலன்களைப் புரிந்து நடத்தல் ஒரு கலை. அக்கலையை இன்றைய சமுதாயம் கற்றுணர்தல் வேண்டும் என்றும், நல்ல பெரிய விளக்கே ஆயினும் அது நல்ல வண்ணம் எரிய ஒரு தூண்டுதல் வேண்டும். அதுபோல ஒருவர் வாழ்க்கையில் துவண்டுவிடும் போது அவரை நல்ல முறையில் ஊக்கப்படுத்தி நம்பிக்கை ஊட்டல் என்பது சிறந்த அறச்செயல் என்பதோடு அச்செயலால் மனிதநேயம் பேணப்படும் என்பதும் இவ்வாராய்சியில் உறுதி செய்யப்பட்டது. மேலும் நல்ல நண்பர்கள் இருந்தால் மனித வாழ்வு நலம் பெற முடியும் என்றும், பிறர் நலம் பயக்க வாழ்தலே சிறப்பு என்றும் இக்கட்டுரையில் தெளிவுபட ஆராயப்பட்டது. ஆக சமுதாய ஒழுக்கத்தின் தேவையை மையமாகக் கொண்டு அநுமனின் நற்சிந்தனைவழி இக்கட்டுரை ஆராயப்பட்டது. வாழ்க சமுதாயம். வளர்க மனிதநேயம்.

**குறிப்பு நூல்கள்**

[1] அம்பலவாணக் கவிராயர். *அறப்பளீசுர சதகம்.* புலவர் அரசு (ப.ஆ). கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1958.

[2] வ. த. இராம சுப்பிரமணியம். *திருமகள் தமிழகராதி.* திருமகள் நிலையம், சென்னை, 1997.

[3] மு. இராசமாணிக்கம். *உளவியல் துறைகள் (இரண்டாம் தொகுதி).*தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, ஜுன் 1973.

[4] கணபதி.வி. *கல்வியின் உளவியல் அடிப்படை.* கங்கை புத்தக நிலையம், சென்னை.

[5] கௌமாரீஸ்வரி. எஸ். *பழமொழி நானூறு.* சாரதா பதிப்பகம், சென்னை, 8ம் பதிப்பு, 2013.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

[6] சாமிநாதையர். உ.வே. *கலித்தொகை.* ஸ்ரீ தியாகராயவிலாச வெளியீடு, சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1956.

[7] சாமிநாதையர். உ.வே. *புறநானூறு.* ஸ்ரீ தியாகராயவிலாச வெளியீடு, சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1956.

[8] சித்ரகலா. ம. *தமிழ் இலக்கியத்தில் ஆளுமை.* இராஜா பப்லிகேசன்ஸ், திருச்சிராப்பள்ளி, மார்ச் 2021.

[9] சிதம்பரநாதன். ஏ.சி (ஈ.டி). ஆங்கிலம் – தமிழ் அகராதி. மெட்ராஸ் பல்கலைக்கழகம், 1965.

[10] சுப்புரெட்டியார். ந. *அண்ணல் அனுமன்.* ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600014.

[11] பரிமேலழகர். *திருக்குறள்.* கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1972.

[12] பழனியப்பன். பா. *கம்பராமாயணம்.* சாந்த மங்கை பதிப்பகம், திருமகள் நிலைய வெளியீடு, முதற்பதிப்பு, பிப்ரவரி 2007.

[13] பாலமுருகன். த. *தேவார திருவாசகத்தில் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்.* தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஸ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, 2018.

[14] பாலுசாமி. நா. (மு.ப.ஆ) வாழ்வியல் களஞ்சியம் – தொகுதி 11. தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாஊர்.

[15] பேராசிரியர்கள் தொகுப்பு நூல். பன்முக நோக்கில் வைணவ இலக்கியம். தமிழ்த்துறை, தர்மமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை.

[16] மதுரை முதலியார்.கு. (உ. ஆ). நாலடியார். முல்லை நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1992.

[17] வேங்கடசாமி நாட்டார். சிலப்பதிகாரம். ராமையா பதிப்பகம், சென்னை – 600 014, ஜுலை 2011.

[18] மங்கல். எஸ்.கே. உளவியல் ஒரு அறிமுகம். ஸ்டெர்லிங் பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிடெட், புது தில்லி, நான்காவது மறுபதிப்பு, 2004.

[19] விஷ்ணுப்பிரியா. இரா. தமிழ் இலக்கியத்தில் மனித நேய மாண்புகள். இராஜா பப்லிகேசன்ஸ், திருச்சிராப்பள்ளி, ஜீலை 2019.

[20] ஜெயந்தி. தமிழ்மலர். நியூ சென்சுரி பதிப்பகம், சென்னை, ஆகஸ்ட். 2022.

## Reference

[1] Ambalavana Kavirayar. *Arabaleeswarar Sathagam*, Pulavar Arasu (P. A.) Kalaka Veliyeedu, Chennai, 1958.

[2] Rama Subramaniyam. Va. Tha. *Thirumagal Tamil Agarathi*. Thrumagal nilayam, Channai. 1997.

[3] Rasha Manickam. M. *Ulaviyal Thurai (Second volume).* Tamil Naddu Pada Nool Niruvanam, Chennai 1973.

[4] Ganapathy. V. Kalvien *Ulaviyal Adippadai*. Gangai Book House, Chennai.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

[5] Gowmarieehwari. S. *PalaMozhli Nanuru*. Saratha Pathippakam, Chennai – 14, 2013.
[6] Samy Natha Iyer. U.V. *Kaliththokai*. Shri Thiyagaraya Vilasam Veliyeedu, Chennai, 1956.
[7] Samy Natha Iyer. U.V. *Poorananooru*. Shri Thiyagaraya Vilasam Veliyeedu, Chennai, 1956.
[8] Chitrakala. M. *Tamil Elakkiyaththil Alumai*. Raja Publication, Thiruchirapalli, March 2021.
[9] Chidambaranathan. A.C (Ed.) English – Tamil Dictionary. University of Madras, 1965
[10] Subburaddiyar. N. *Annal Anuman*. Asian Printers, Chennai. 600 00=14
[11] Parimalzhalakar. *Thirukkural*. Kalaga Veliyeedu, Chennai, 1972
[12] Palaniyappan. P. *Kamparamayanam.* Shantha Mankai Pathippagam, Thrumagal Nilaya Veliyeedu, Chennai. 2007
[13] BalaMurugan. T. *Thevara Thiruvasakaththil Vizhanamum Maizhanamum*. Tamil Dept. Shri Ramakrishnan Mission Arts and Science College, 2018.
[14] Balusamy. N. (Mu. Pa. Aa) *Valviyal Kalanjiyam – Part 11*. Tamil University, Thanjavur.
[15] Prof. Thoguppu Nool. *Panmuga Nokkil Vainava Elakkiyam*. Tamil Department, Tharmamurthi Eravu Pagathur Kalavala Kannan Chitty Inthu Kalluri, Pattapiram, Chennai,
[16] Madurai Muthaliyar. K. (V. A). *Naladiyar*. *Mullai Nilayam*, 43, Pudhu Street, Mannadi, Chennai, 1992.
[17] Vengadasamy Nattar. *Silappathikaram.* Ramaiya Pathippagam, Chennai, July 2011.
[18] Mangal. S. K. *An Introduction to Psychology*. Sterling Publishers Private Ltd., New Delhi, Fourth Reprint – 2004.
[19] Vishnupriya.R, *Tamil Elakkiyaththil Manitha Neya Manpukal*. Raja Publication, Trichy, 2019.
[20] Jayanthi. R. *Tamil Malar*. New Century Pathippakam, Madurai, August 2022.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:** இத்தலைப்பில் கட்டுரை எழுதுவதற்கு வாய்ப்பளித்த ந. சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். / I would like to express my gratitude to Na. Subbu Reddiar 100 Educational Trust for allowing me to write an article on this topic.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.